Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.15**
Defence
Court

| | |
|---|---|
| Name | கௌதமன் |
| Father's name | சின்னசாமி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 12th day of December 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 12th day of December 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் நெல்லிக்குப்பம், அம்பேத்கர் நகர், மேல்பாதி கிராமத்தில் குடியிருந்து, மெட்டல்பேப்ரிகேஷன் வேலை செய்து வருகின்றேன். ஆஜர் எதிரிகளை தெரியும், இவ்வழக்கு

சம்பவத்தில் இறந்துபோன வேல்முருகன் எனது தூரத்து உறவினர். மச்சான் உறவு முறை ஆகும். நாங்கள் வசிக்கும் அம்பேத்கர் நகருக்கும், எதிரிகள் வசிக்கும் மேல்பாதிக்கும், பிரச்சினை இருந்து வந்தது. எதிரிகளின் ஊரின் வழியாக நாங்கள் வழக்கமாக பிணத்தை சுடுகாட்டுக்கு எடுத்து செல்வோம். அவ்வாறு ஒருமுறை எடுத்து செல்லும்போது எங்கள் ஊருக்கும் அவர்கள் ஊருக்கும் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. இந்த வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு, ஒருநாள் இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்கு, எங்கள் ஊரை சேர்ந்த சில இளைஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஏன் என்று அவர்களை விசாரித்தபோது, எங்கள் ஊரை சேர்ந்த இளைஞர்களான நவிநாத், பில்லா (எ) வேல்முருகன், மற்றும் ஒரு நபரை ஸ்கெட்ச் போட்டு கொலை செய்ய மேல்பாதிக்காரர்கள் திட்டம் போட்டிருப்பதாக எங்கள் பகுதி இளைஞர்கள் சொன்னார்கள். எதற்கு பிரச்சினை , நாம் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று நான் எங்கள் பகுதி இளைஞர்களிடம் கூறினேன். பிறகு நான் மேல்பாதிக்கு சென்று, இவ்வழக்கு எதிரிகளான சுமன்ராஜ் மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோர்களிடம் எதற்கு வீணான பிரச்சினை, ஏன் இவ்வாறு எங்கள் ஊர்க்காரர்களை கொலை செய்ய போவதாக கூறுகிறீர்கள் என கேட்டேன். நான் கேட்டபோது, எதிரிகள் இருவரும் அப்படியெல்லாம் கிடையாது அண்ணா, என என்னிடம் கூறினார்கள். சண்டை எதுவும் போட்டுக்கொள்ளாதீர்கள் என அவர்களிடம் நான் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 31.12.2019 அன்று மாலை ஐந்து மணிக்கு, இறந்துபோன பில்லா (எ) வேல்முருகனை பார்த்து, நான் எச்சரிக்கை செய்து,வெளியில் செல்லவேண்டாம், வீட்டிலேயே இரு என்று கூறினேன். பிறகு நான் எங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள்காலை 07.30 மணிக்கு பில்லாவை யாரோ கொலை செய்துவிட்டதாக போன் வந்தது. நான் ஜி. எச்-க்கு சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய முதல் எதிரி தரப்பில் எவ்வித முன்னெடுப்பும் இல்லை. எனவே முதல் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகின்றது.

எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை

2. போலிசார் விசாரித்தபோது, எதிரிகள் கொலை செய்யபோவதாக நான் கூறவில்லை என்றால், சரியல்ல. ஸ்கெட்ச் போட்டு கொலை செய்யப்போவதாக என்னிடம் கூறியதாகத்தான் போலிசாரிடம் கூறினேன். நான் அவ்வாறு போலிஸ் வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சுமன்ராஜ் மற்றும் ஜெயச்சந்திரன் இருவரையும் பார்த்து, ஏன் கொலை செய்யபோவதாக திட்டம் போட்டுள்ளீர் என நான் கேட்டதாக நான் போலிஸ் வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரி ஜெயச்சந்திரனை விசாரித்தபோது, " நாங்கள் அப்படியெல்லாம் எதுவும் சொல்லவில்லை அண்ணா " என தன்மையாக தான் கூறினார் என்றால் ஆமாம். அந்த விவரத்தை நான் போலிசில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தபோது வேல்முருகன் அதிகம் மது அருந்தி கிடந்தார் என்று நான் கூறவில்லை, ஆனால் வேல்முருகனுக்கு குடிப்பழக்கம் இருப்பதாக மட்டுமே விசாரணையின்போது கூறினேன்.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 44 of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.16**
Defence
Court

| | |
|---|---|
| Name | சண்முகம் |
| Father's name | அண்ணாமலை |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 52 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 12th day of December 2023.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 12th day of December 2023.**

SIGNATURE OF THE JUDGE.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் நெல்லிக்குப்பம் மேல்பாதி கிராமத்தில் வசித்து வருகின்றேன். கடந்த 2020 ஆம் வருடம் ஜனவரி 1 ஆம் தேதி, நான் சென்னையிலுள்ள என் மாமியார் வீட்டிலிருந்து, பேருந்தில்

ஊருக்கு திரும்ப வந்துக்கொண்டிருந்தபோது, என் தாயார் எனக்கு போன் செய்தார்கள். மேல்பாதி மெயின்ரோடில் உள்ள எனக்கு சொந்தமான காலிமனையில் பில்லா என்கிற பையனை யாரோ வெட்டிபோட்டிருப்பதாக என் தாயார் எனக்கு தகவல் சொன்னார். நான் வந்து பார்த்தபோது அங்கு அந்த நபரின் சடலம் இல்லை. போலிசார் எடுத்து சென்றுவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டேன். இவ்விவரம் தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். நடந்த உண்மைகளை அவரிடம் தெரிவித்தேன்.

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய முதல் எதிரி தரப்பில் எவ்வித முன்னெடுப்பும் இல்லை. எனவே முதல் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகின்றது.

எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்குவிசாரணை

2. 31.12.2019 அன்றிரவு 12.00 மணிக்கு நான் சென்னையிலிருந்து புறப்பட்டேன். என் தாயார் எனக்கு போன் செய்யும்போது விடியற்காலை நான்கு அல்லது ஐந்து மணி இருக்கும். அப்போது தான் எங்கள் இடத்தில் கொலை செய்து போட்டுவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*